## சிந்திக்கும் பன்றி

உனக்குள் கொஞ்சம் பன்றி
எனக்குள் கொஞ்சம் மனிதன்.
உனக்கு நான் ஒரு சுவையான பன்றிக் கறி கட்லெட்.
எனக்கு நீ ஒரு தவிட்டுப் புண்ணாக்கு.
தட்டு நிறைய பிரபஞ்ச ரகசியங்களை வைத்து
நீயும் நானும் ஒன்றாகவே பகிர்ந்து கொள்கிறோம்.
ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டு நீளும்
ஒரே மரபியல் சங்கிலியின் இருவேறு கண்ணிகள் நாம்.
ஆனாலும் எனது விரைத்த காதும் , தட்டு முகமும்,
ஆயுத எழுத்தைப்போல் மூக்குத் துவாரமும் வாயும்
சேறு பூசிய கனத்த உடம்பும் பார்த்து நீ சிரிக்கிறாய்.
உன்னால் உட்கொள்ள முடியாத
சமயலறைக் கழிவுகளை நான் சாப்பிட்டு
புகையூட்டிய பன்றி விலா பேக்கன்களாக உருமாற்றி
உனது தட்டில் பரிமாறுகிறேன்.
எனது கழிவுகளால் உனது வயலை உரமூட்டி விட்டு
கிடைக்கும் கொஞ்ச நேரத்தில் புணர்ந்து
ஒரே நேரத்தில் பன்னிரண்டு குட்டிகள் ஈனும்
என்னைப் பார்த்து நீ பரிகசிக்கிறாய்.
எவ்வளவு சாப்பிட்டாலும் அடங்காத
உனது அகோர பசி தெரியுமென்பதால்
ஒவ்வொரு முறையும் பன்னிரண்டு குட்டிகளை
ஈனுகிறேன்
சொன்னால் புரிந்து கொள்
நம் இருவர் தரப்பு நியாயங்களும்
வேறு வேறானவை.

உனக்கு எல்லாமே அதிசயம்.
எனக்கு எதுவுமே அதிசயம் இல்லை.
புத்தகத்தைக் கண்டுபிடித்த நீ
கற்பனையைத் தொலைத்து விட்டு நிற்பதைப் பார்த்து
நான் உன்மேல் இரக்கப்படத்தான் செய்கிறேன்.
என்ன செய்வது
பல கோடி ஆண்டுகளுக்கு முன் நாமிருவரும்
ஒரே மூதாதையரைக் கொண்டிருந்தோம்
என்பதை நினைத்துப் பார்த்து மன்னித்து விடுகிறேன்.-

- 17 செப்டம்பர் 2020

